## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 3-6 - தூவிரிய[1]
### (திருவாலி 2 - தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறிய பாசுரம்)

1198 * தூவிரிய மலர் உழக்கித் * துணையோடும் பிரியாதே *
பூவிரிய மது நுகரும் * பொறிவரிய சிறு வண்டே! **
தீவிரிய மறை வளர்க்கும் * புகழாளர் திருவாலி *
ஏவரி வெஞ்சிலையானுக்கு * என் நிலைமை உரையாயே 1

1199 பிணி அவிழும் நறுநீல * மலர் கிழியப் பெடையோடும் *
அணிமலர் மேல் மது நுகரும் * அறுகால சிறு வண்டே! **
மணிகெழுநீர் மருங்கலரும் * வயலாலி மணவாளன் *
பணி அறியேன் நீ சென்று * என் பயலை நோய் உரையாயே 2

1200 நீர் வானம் மண் எரி காலாய் * நின்ற நெடுமால் * தன்
தாராய நறுந்துளவம் * பெருந்தகையேற்கு அருளானே! **
சீராரும் வளர் பொழில் சூழ் * திருவாலி வயல் வாழும் *
கூர்வாய சிறு குருகே! * குறிப்பறிந்து கூறாயே 3

1201 தானாக நினையானேல் * தன் நினைந்து நைவேற்கு * ஓர்
மீனாய கொடி நெடுவேள் * வலி செய்ய மெலிவேனோ? **
தேன்வாய வரி வண்டே! * திருவாலி நகராளும் *
ஆனாயற்கு என்னுறு நோய் * அறியச் சென்று உரையாயே 4

1202 வாளாய கண் பனிப்ப * மென்முலைகள் பொன் அரும்ப *
நாள் நாளும் * நின் நினைந்து நைவேற்கு ** ஓ! மண் அளந்த
தாளாளா! தண் குடந்தை நகராளா! * வரை எடுத்த
தோளாளா! * என் தனக்கு ஓர் * துணையாளன் ஆகாயே! 5

1203 தாராய தண் துளவ * வண்டுழுத வரை மார்பன் *
போரானைக் கொம்பொசித்த * புட்பாகன் என் அம்மான் **
தேராரும் நெடு வீதித் * திருவாலி நகராளும் *
காராயன் என்னுடைய * கனவளையும் கவர்வானோ! 6

1204 கொண்டரவத் திரை உலவு * குரை கடல் மேல் குலவரை போல் *
பண்டரவின் அணைக் கிடந்து * பார் அளந்த பண்பாளா! **
வண்டமரும் வளர் பொழில் சூழ் * வயலாலி மைந்தா! * என்
கண் துயில் நீ கொண்டாய்க்கு * என் கனவளையும் கடவேனோ! 7

1205 * குயிலாலும் வளர் பொழில் சூழ் * தண் குடந்தைக் குடமாடீ! *

[1] இது கோவில் திருமொழி

துயிலாத கண் இணையேன் * நின் நினைந்து துயர்வேனோ! **
முயலாலும் இள மதிக்கே * வளை இழந்தேற்கு * இது நடுவே
வயலாலி மணவாளா! * கொள்வாயோ மணிநிறமே! 8

1206 நிலையாளா! நின் வணங்க * வேண்டாயே ஆகிலும் * என்
முலையாள ஒரு நாள் * உன் அகலத்தால் ஆளாயே? **
சிலையாளா! மரம் எய்த திறலாளா! * திருமெய்ய
மலையாளா! * நீயாள வளையாள மாட்டோமே 9

1207 * மையிலங்கு கருங்குவளை * மருங்கலரும் வயலாலி *
நெய்யிலங்கு சுடர் ஆழிப் * படையானை நெடுமாலை **
கையிலங்கு வேல் கலியன் * கண்டுரைத்த தமிழ் மாலை *
ஐயிரண்டும் இவை வல்லார்க்கு * அருவினைகள் அடையாவே 10

**அடிவரவு:** தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில்
நிலையாளா மையிலங்கு கள்வன்